DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**SC.No.** 106 /2018 PW-2

Name : Chitra W/o Aarumugam Age -

Father's Name : Village

Taluk Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 23.07.2025

<u>அரசுத்தரப்பில் விசாரணை</u>

நான் தற்போது சன்னதி தெரு, திருத்தணியில் வசித்துவருகிறேன். நான் குடும்பத்தை வீட்டிலிருந்து கவனித்துவருகிறேன். 9.10.2014ம் தேதியில் எனது கணவர் வீட்டிலிருந்து இந்திரா நகர் திருத்தணியில் உள்ள கம்பெனிக்கு சென்றார். கம்பெனிக்குச் சென்று வந்துவிடுகிறேன் என்று சென்றார், அதன்பிறகு 5 நபர்கள் எனது கணவரை அடிப்பதாக அங்கிருந்த ஒருவர் ஓடிவந்து கூறினார். நான் சென்று பார்த்தபோது அங்கு யாருமே இல்லை, எனது கணவரை திருத்தணியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது எனது கணவர் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். போலிஸ் நிலையத்திலிருந்து கையெழுத்து கேட்டார்கள் கையெழுத்துப் போட்டேன். வேறு விவரங்கள் எனக்குத் தெரியாது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது கணவர் திருத்தணி நகராட்சி 13வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலராக இருந்துவருகிறார். அவருக்கும் தி.மு.க.வைச் சேர்ந்த கிரண் என்பவருக்கும் கட்சி ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் பிரச்சினை இருந்துவந்தது என்றும், கிரண் என்பவர் திருத்தணி அனுமந்தாபுரம் புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்தது சம்பந்தமாக இரண்டுபேருக்கும் பிரச்சினை ஏற்பட்டதென்றும், இதனால் கிரண் என் கணவரை மிரட்டினார் என்றும், 9.10.2016ல் சுமார்

காலை 7.50 மணிக்கு திருத்தணி ___ சோளிங்கர் இந்திராகாந்தி நகர் கன்னிகாபுரம் ரோட்டில் வந்துகொண்டிருந்தபோது எனது முதலாளி காருக்கு முன்பே ஒரு ஆட்டோ திடீரென்று மோதுவதுபோல் வந்தது என்றும், காரின் கண்ணாடியில் ஜாகீர் மற்றும் ராஜேஷ் இரும்பு ராடாலும் கத்தியாலும் உடைத்து வெடிகுண்டு போட்டு எனது கணவரை வெளியே இழுத்து தலையில் வெட்டியதாகவும், அந்த நேரத்தில் நாகராஜன் மற்றும் சுரேஷ் ஓடிவருவதைப்பார்த்து இவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள் என்றும், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த 4 நபர்கள் ஆயதங்களுடன் ஆட்டோவில் ஏறி சோளிங்கர் பக்கம் ஓடிவிட்டார்கள் என்றும் எனது கணவரை காரில் ஏற்றிக்கொண்டு 8 மணிக்கு திருத்தணி அரசு மருத்துவமனையில் கொண்டுசென்றபோது எனது கணவர் இறந்துவிட்டதாகவும், கம்பெனி மேனேஜர் மற்றும் பூவரசன் ஆகியோர் என்னிடம் சொன்னார்கள். நான் திருத்தணி மருத்துவமனையில் சென்று பார்த்தபோது எனது கணவர் பலத்த காயம் ஏற்பட்டு இறந்துகிடந்தார் என்றும், இது சம்பந்தமாக எனது மேனேஜர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**SC.No.** 106 /2018 PW-1

Name : Madhan S/o Purushothaman Age -

Father's Name : Village

Taluk Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 23.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரு, திருத்தணியில் வசித்துவருகிறேன். செல்போன் கடை நடத்திவருகிறேன். 2014ம் வருடம் நான் வாட்டர் கம்பெனியில் மேனேஜராக இருந்தபோது முதலாளி ஆறுமுகம் என்பவர் கம்பெனி வந்தார், தேதி மாதம் ஞாபகமில்லை. முதலாளி எல்லா வேலையையும் பார்த்துவிட்டீர்களா என்று கேட்டார், எல்லா வேலையும் முடிந்துவிட்டது என்று சொன்னேன். அதன் பிறகு நான் வீட்டிற்கு செல்கிறேன் என்று சொல்லி ஸ்கார்பியோ காரில் ஏறிச்சென்றார். அவருடன் பூவரசன் என்ற ஓட்டுனர் சென்றார். அவர் சென்ற 10 நிமிடம் கழித்து எனக்கு போன் செய்து யாரோ எனது முதலாளியை வெட்டியதாக சொன்னார். நான் ஓடிவந்து பார்த்தபோது அவர் இறந்துவிட்டிருந்தார், உடனே ஆம்புலன்ஸ் வர காலதாமதமானதால் அதே காரில் திருத்தணியில் உள்ள மருத்துவமனைக்கு அவரை எடுத்துச்சென்றேன். புகாரை நான்தான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரை காவல் துறையினர் கொடுத்தனர் அதில் கையெழுத்துமட்டும் நான் போட்டேன். போஸ்ட்மார்டம் செய்வதற்காக புகார் கொடுக்கவேண்டுமென்று சொன்னதால் நான் புகார் கொடுத்தேன் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கையெழுத்து அ.தா.சா.ஆ.1 ஆகும். இந்த வழக்கைப் பற்றிய வேறு எந்த விவரமும் எனக்குத் தெரியாது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

9.10.2016ல் சுமார் காலை 7 மணியளவில் கம்பெனியிலிருந்து 7.40 மணிக்கு என்னுடைய முதலாளி காரில் டிரைவருடன் திருத்தணி புறப்பட்டார் என்றும், அவருக்குப் பின்னார் எனது சொந்தமான இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன் என்றும், திருத்தணி — சோளிங்கர் இந்திராகாந்தி நகர் கன்னிகாபுரம் ரோட்டில் வந்துகொண்டிருந்தபோது எனது முதலாளி காருக்கு முன்பே ஒரு ஆட்டோ திடீரென்று மோதுவதுபோல் வந்தது என்றும், காரின் டிரைவர் காரை இடதுபக்கம் திருப்பினார் என்றும், அப்போது ஆட்டோ ஓட்டிவந்த திருத்தணி ஜாகீர் என்கின்ற ஜாகீர் உசேன் காரின் முன்பக்கம் மோதி நிறுத்தினார் என்றும், ராஜேஷ் என்பவனும் பார்த்தால் அடையாளம் காணக்கூடிய இரண்டு நபர்கள் ஆட்டோவிலிருந்து இறங்கி பெட்ரோல் பிளாஸ்டிக் கவரை காரின்மீது வீசினார்கள் என்றும் அது காரில் பட்டு சிதறியது என்றும், அதிலிருந்த ஒருவன் லைட்டரினால் கொளுத்தி நாட்டுவெடிகுண்டை காரின்மீது வீசினார் என்றும், அது வெடிக்காமல் காரின் உள்ளே விழுந்தது என்றும், மேலும், நான் இதைப் பார்த்து ஓரமாக நின்றுவிட்டேன் என்றும், மேற்கண்ட ராஜேஷ் கையிலிருந்த அறிவாளுடன் கார் கண்ணாடியை உடைத்தார் என்றும், ஜாகீர் மிளகாய்த்துளை காரின்மீது வீசினார் என்றும், ராஜேஷ் கையில் வைத்திருந்த வெட்டறிவாளால் என்னுடைய முதலாளியின் தலையில் வெட்டினான் என்றும், எனது முதலாளி அங்கேயே மயங்கி விழுத்துவீட்டார் என்றும், டிரைவரையும் தாக்கினார்கள் என்றும், அங்கிருந்த சுரேஷ் மற்றும் நாகராஜன் ஆகியோர் ஓடிவந்தார் என்றும், அதைப்பார்த்து மேற்கண்ட நபர்கள் ஓடிவிட்டார்கள் என்றும், உடனே அவர்கள் உதவியுடன் நான் என் முதலாளியை திருத்தணி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன் என்றும், எனது முதலாளி இறந்துவிட்டதாக டாக்டர்கள் கூறினார்கள் என்றும், அதன்பிறகு காவல் நிலையத்தில் இதுசம்பந்தமாக புகார் கொடுத்தேன் என்றும் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.